www.tamilarangam.net

# இது ஒரு அவசர வேண்டுகோள்!

## அன்பான மக்களே !

இன்று பாரிய ஒரு தேசியக் கடமை எம் முன்னால் உள்ளது. எம்மை அழித்து விடத் துடிக்கும் எதிரியின் கொடூர ஒடுக்குமுறையினை எதிர்த்து உறுதியுடன் நிற்கும் எம்மவர் கரங்களை எம்மால் பலப்படுத்த முடியும். நாம் பொருளாதார ரீதியாகச் செய்யும் பங்களிப்பு எம்மவர் இழப்பினைக் குறைக்கும். எமது வெற்றியினைத் துரிதப்படுத்தும்.

ஒரு பெரும் யுத்தத்தினை எதிர்கொள்ள பெருந்தொகையான நிதி தேவைப்படும் என்பது நீங்கள் அறியாத ஒன்றல்ல. ஆனால் இந்த நிதி மிக மிக அவசரமாகத் தேவைப்படுகின்றது என்பதனை உங்களின் கவனத்தில் கொண்டுவருகின்றோம்.

**இந்த நிதித் தேவையின் ஒரு பகுதியினைப் பூர்த்திசெய்ய அவசரகால தேசிய பாதுகாப்பு நிதிச் சேகரிப்பினை 15.05.1994 காலை - 9.00 மணியிலிருந்து ஆரம்பிக்கின்றோம். நிதி சேகரிப்பாளர்கள் எம்மை நாடிவரும்போது நாம் ஒவ்வொருவரும் 1000 பிரெஞ்சு பிராங்குகளுக்குக் குறையாத ஒரு தொகையான பங்களிப்பாக வழங்குவது என உறுதி கொள்வோம்.**

நாம் எதிர்கொள்ளும் பல்வேறு செலவீனங்களுடன் ஒப்புநோக்கும் போது இது ஒரு பெரிய தொகையல்ல. எனினும் சிறுதுளி பெருவெள்ளம்! எமது உணர்வுபூர்வமான பங்களிப்பு, எம் இரத்த உறவுகளின் கரங்களைப் பலப்படுத்தும்.

இது, நாம் அனைவருமே எமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர வேண்டிய நேரம். எதிரிப்படைக்கு தமிழர்கள் அனைவரும் 'பயங்கரவாதிகளே'. இதனால் அவனது இன அழிப்பு தமிழீழ மக்கள் அனைவரையும் நோக்கியதாகவே இருக்கும். இதனால் நாம் அனைவரும் இணைந்து இதனை எதிர்கொள்ளவேண்டிய தார்மீகக் கடமை எமக்கு உண்டு.

எம் அனைவருக்கும் தமிழீழமே தாயகம். எம் தமிழீழத் தேசத்தைக் காத்திட, மக்களைக் காத்திட நாம் அனைவரும் ஓரணியில் திரள்வோம். பெரும் பகை வெல்வோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளை**


# இது ஒரு அவசர வேண்டுகோள்!


# அவசரகால தேசிய பாதுகாப்பு நிதி

## சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் வாடல் கண்டும்..

## அன்பான பிரான்சு வாழ் தமிழீழ மக்களே !

ஐரோப்பாவின் அவசர வாழ்வில் மூழ்கி, மூச்சுத் திணறும் நிலையிலும் எதிர்நீச்சல் அடித்த படியே எம் வாழ்வினை நகர்த்திக் கொண்டிருக்கிறோம். வேலைப்பிரச்சினை, குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பான அச்சம், விகாரமாய் வளர்ந்து வரும் இனவெறி இங்கேயும் பரவி விடுமோ என்ற உள்ளார்ந்த அச்சம், எமது தாயகத்தின் பசுமை நிறைந்த நினைவுகளின் ஏக்கம்... இப்படியாக மனதை வாட்டும் எண்ணங்களுடன் எமது வாழ்வினை நகர்த்திக் கொண்டிருக்கிறோம். ஒரு ஐரோப்பியச் சூழலில் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்ற போதும் உணர்வுரீதியாக நாம் தமிழர்களாக, தமிழீழத்தின் குடிமக்களாகவே வாழ்ந்து வருகின்றோம். புலம் பெயர்ந்த ஒரு சூழலில், நாம் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டித் தான் வருகின்றது. அப் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

எனினும் எதிரிப்படை விமானங்கள் எமது குடியிருப்புக்கள் மீது குண்டு மழை பொழியுமோ என்ற அச்சம் எமக்கில்லை. எதிரிப்படை இனச் சங்காரம் புரிய எமது வீட்டினுள் புகுமோ என்ற அச்சம் எமக்கில்லை. உண்பதற்கான உணவும் போதிய மருந்துகளும் கிடைக்காமல் போய் விடுமோ என்ற அச்சம் எமக்கில்லை. எந்த நேரமும் சாவினைச் சந்திக்க நேரலாம் என்ற அச்ச உணர்வும் எம்மிடம் இல்லை.

**அவசரகால தேசிய பாதுகாப்பு நிதி ❖ ஆரம்பம் - 15.05.1994**

www.tamilarangam.net

ஆனால்,

**எமது தாயகத்தில் எமது இரத்த உறவுகளின் நிலை என்ன?**

எதிரிப்படையின் விமானங்கள் வீசும் குண்டுகளினால் உடல் சிதறி துடிக்கத் துடிக்க மாண்டவர் எத்தனை?

எதிரிப்படை புக்காராக்கள் வீசும் எறிகணைகளால் உருக்குலைந்து போனவர் எத்தனை?

உண்ண உரிய உணவின்றி, போசாக்குக் குறைவினால் தவித்திடும் பாலகர் எத்தனை?

மருத்துவ வசதியின்றி, மரணத்துடன் போராடி மாய்ந்திடும் எம்மவர் எத்தனை?

எதிரிப்படையின் இன ஒழிப்பு இராணுவ நடவடிக்கைகளில் சிக்கிச் சீரழிந்து போனவர் எத்தனை?

இருந்தும்..

இத்தனையும் தாண்டி எம்மவர் நிமிர்ந்து நிற்கிறார். தமிழீழத் தேசத்தில், சுதந்திரமாக, மகிழ்ச்சியாக வாழ்ந்திடத் துடிக்கிறார். எதிரியின் கொடூர ஒடுக்குமுறையினை எதிர்கொள்ள ஆயிரம் ஆயிரமாய் வேங்கைகள் களத்திலே குதிக்கிறார். நாளை விடியும் என்ற நம்பிக்கை உணர்வுடன் மக்கள் அனைவரும் ஒருமித்து உரிமைக்காய் தோள் கொடுக்கிறார்.

எமது எதிரியோ மிகவும் கொடியவன். தமது சொந்த மக்களிலிலேயே 60,000 பேருக்கு மேலாகக் கொன்று குவித்தவன். தமிழீழ மக்களைப் பூண்டோடு அழித்திட எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரத் தயங்காதவன். 'இனப்பிரச்சினையே இங்கு இல்லை, பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு' எனக் கொக்கரிப்பவன். அவனைப் பொறுத்த வரையில் நாம் அனைவரும் பயங்கரவாதிகளே. அடிமையாக அடங்கி, ஒடுங்கி இரண்டாம் தரக் குடிமக்களாக வாழும் இழிநிலையினை எதிர்த்து, சுதந்திரமாக வாழத்துடிக்கும் தமிழீழ மக்கள் அனைவரும் அவனைப் பொறுத்தவரையில் பயங்கரவாதிகளே.

எமது எதிரி தனி மனிதனல்ல. அவன் ஒரு பாரிய நிறுவனம். சிங்கள - பௌத்த இனவாதமாக எல்லா மட்டங்களிலும் நிறுவனமாகி அவன் நிற்கிறான். அரசாக, அரச அங்கமாகிய பாராளுமன்றமாக, அரசியலமைப்புச் சட்டமாக, இராணுவமாக, கடற்படையாக, விமானப்படையாக, பொலிசாக, அரச சிவில் நிர்வாகமாக, அரசியல்வாதிகளாக, இனவாதக் கட்சிகளாக, பௌத்த - சிங்கள இனவாத அமைப்புகளாக, நீதித்துறையாக.... இப்படியாக எங்கும் எதிலும் அவன் தன் கோரப்பற்களை விரித்தபடி நிற்கிறான். எமது அன்னை மண்ணையும், தொப்புள்கொடி உறவையும் விழுங்கிடத் துடிக்கிறான்.

இதன் வெளிப்பாடுதான் தமிழீழ மக்கள் மீதான அவனது தொடர்ச்சியான யுத்தப் பிரகடனம். தமிழீழ மக்களை அழித்திடப் பாரிய இராணுவ நடவடிக்கையினை எந்நேரமும் ஆரம்பிப்பதற்கான தயாரிப்புக்களை மேற்கொண்டபடி அவன்



இது ஒரு அவசர வேண்டுகோள்!

இருக்கின்றான். யுத்தத்திற்குத் தேவையான ஆளணி, ஆயுதங்கள், விமானங்கள், கடற்படைக் கப்பல்கள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாகச் சேகரித்துக்கொண்டு நிற்கிறான். தமிழீழ மக்கள் மீது எந்நேரமும் பாய்வதற்குத் தயாராக வெறிபிடித்து நிற்கிறான்.

இறுதியாகக் கிடைக்கும் தகவல்களின்படி, வவுனியாவில், 'ஜெயமகா' எனும் குறியீட்டுப் பெயருடன் சிறீலங்கா ஆயுதப் படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளை, வெவ்வேறு பகுதிகளில் இருந்து மேற்கொள்வதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த இராணுவ நடவடிக்கைகள் தமிழீழ மண்ணை ஆக்கிரமிப்பதனை மட்டுமன்றி, தமிழீழ மக்களை கோரமாகக் கொன்று குவிப்பதன் மூலம், அவர்களின் விடுதலை உணர்வினை நசுக்கும் திட்டத்தினையும் தம்மகத்தே கொண்டுள்ளன. தாம் தொடர்ச்சியாகப் பெற்று வந்த தோல்விகளை மூடி மறைப்பதற்காக, தமது இராணுவ நடவடிக்கைகள் வெற்றியில் முடிவடைந்தன என சிங்கள மக்களை ஏமாற்றுவதற்காக, 'புலிகள் ஒழிப்பு' எனும் போர்வையில் பல நூற்றுக்கணக்கான தமிழீழ மக்களை கொன்று குவிக்கவும் சிறீலங்கா ஆயுதப் படையினர் தயங்கப் போவதில்லை. சிறீலங்காவின் தேர்தல் ஆண்டாகிய இவ் ஆண்டில் தமிழின ஒழிப்பு தமக்கு வெற்றியைத் தேடித் தரும் என்பதில் ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருப்பதனால் 'போர்' 'போர்' என வெறி கொண்டு நிற்கிறார்கள். இனி நடத்தும் யுத்தத்தினை இறுதி யுத்தமாக நடத்தவே அரசு விரும்புகின்றது எனவும் கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது.

**ஆம். இதனால் தமிழீழத்தில் எந்நேரமும் பெரும் யுத்தம் மூளலாம்.**

இந்த யுத்தத்தினை எதிர்கொள்ள மண்ணின் மைந்தர்கள் தயாராகிக் கொண்டுள்ளனர். சமாதானக் கதவுகளை அகலத் திறந்து விட்ட போதும், எதிரி அதனை புறங்காலால் தள்ளி விடும் போது யார் தான் என்ன செய்ய முடியும்? தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ணக் குழுக்களை வரவேற்றும், யுத்தக் கைதிகளை விடுவித்தும், விடுதலைப்புலிகள் சமாதான சமிக்ஞைகளை காட்டுகின்ற போதும் இனவெறியும் இறுமாப்பும் கலந்த அலட்சியமே பதிலாக வரும்போது எவர்தான் என்ன செய்ய முடியும்? இந்த யுத்தத்தினை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இரு கைகள் சேரும் போது தான் ஒலி எழும்பும். சமாதான ஒலி எழும்ப வேண்டுமானால் சிறீலங்கா அரசு-விடுதலைப் புலிகள் என்ற இரு சக்திகளும் சமாதானத்திற்குத் தயாராக இருக்கவேண்டும்.

சமாதானத்தில் எம்மவர் காட்டும் அக்கறை எதிரியிடம் இல்லை. அவனால் சமாதானத் தீர்வைக் காணவும் முடியாது. எமது உரிமைகளை வழங்கக் கூடிய நிலையில் அவன் இல்லை. இதனால் அவன் யுத்த மொழியினைத் தான் பேசுவான். அவனுக்குத் தெரிந்த மொழியில் பதில் அளிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இதனால் தான் ஒரு பக்கத்தில் சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு, மறுபுறத்தில் யுத்தத்தினை எதிர் கொள்ளத் தயாராகின்றனர் விடுதலைப் புலிகள்!